## இணைந்த சேவைகள் உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த உள்ளக இடமாற்றக் கொள்கை
## கல்வி அமைச்சு

### 1. அறிமுகம்

இணைந்தசேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் : COM/trans/V/[illegible]/2020 மற்றும் 2021.08.06ஆம் திகதியுடைய 01/2021 ஆம் இலக்கம் கொண்ட இணைந்த சேவைகள் சுற்றுநிருபத்திற்கமைய கல்வி அமைச்சின் இணைந்தசேவைகள் உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த உள்ளக இடமாற்ற கொள்கைகள் பின்வருமாறு.

### 2. வருடாந்த உள்ளக இடமாற்றத்திற்குள் உள்ளடங்கும் அலுவலர்கள் தொடர்பான விபரங்கள்.

#### 2.1 உரிய அலுவலர்கள்

இணைந்த சேவைகளுக்குரிய கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள சேவையிலுள்ள அலுவலர்களுக்கு இவ்வருடாந்த உள்ளக இடமாற்றக்கொள்கை ஏற்புடையாதாகும்.

i. அபிவிருத்தி உதவியாளர் சேவை (தரம் III / II / I )
ii. இலங்கை அரச நூலகர்சேவை (தரம் III / II / I )
iii. இலங்கை தகவல் தொழில்நுட்ப சேவை ( வகுப்பு 2/3)
iv. முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் சேவை (தரம் III / II / I )
v. அலுவலக ஊழியர் சேவை (தரம்III / II / I )
vi. சாரதிகள் சேவை (தரம் III / II / I )

#### 2.2 சேவை நிலையமொன்றில் பூரணப்படுத்தப்பட வேண்டிய சேவைக்காலங்கள்

2.2.1 தமது சேவை நிலையத்தில் தொடர்ச்சியாக 02 வருடங்கள் சேவையாற்றிய அலுவலர்கள் உள்ளக இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்களாவர்.

2.2.2 கல்வி அமைச்சில் அல்லது கல்வி அமைச்சின் கீழியங்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்களம், தேசிய பாடசாலைகள், தேசிய கல்வியியற் கல்லூரிகள் மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் முதலான சேவை நிலையங்களில் ஒரே சேவை நிலையத்தில் 05 வருடங்களுக்கும் அதிகமான காலங்கள் சேவையாற்றியிருக்கும் அலுவலர்கள் இடமாற்றத்திற்கு உள்ளாவார்கள்.

#### 2.3 உள்ளக இடமாற்றத்திற்குரிய சேவை நிலையங்கள்

i. கல்வி அமைச்சு
ii. கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
iii. தேசிய பாடசாலைகள்
iv. தேசிய கல்வியியற் கல்லூரிகள்
v. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள்

இச்சேவை நிலையங்களில் மேற்படி சேவைகளுக்குரிய பதவிகள் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தில் அனுமதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

2.4 முறைமைகளும் ஏனைய விடயங்களும்

i. வருடாந்த உள்ளக இடமாற்றக் கொள்கையின் 2.2.1ம் வகுதியின் கீழ் வருகின்ற உத்தியோகத்தொருவர் இதனடிப்படையில் இடமாற்றம் கோரப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில், அக்கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக அதன் 2.2.2 ம் வகுதியின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்துள்ள, சேவை நிலையமொன்றில் அல்லது பல சேவை நிலையங்களில் அதிக சேவைக்காலத்தைக் கொண்ட அலுவலர்கள் அச்சேவை நிலையங்களுக்கு வெளியே இடமாற்றம் செய்யப்பட முடியும்.

ii. யாதேனும் சேவை நிலையமொன்றுக்கு இடமாற்றத்தைப் பெற்றுக் கொள்ள அதிக கோரிக்கைகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் அவற்றுள் அதிக சேவைக்காலம் அல்லது மேலே 2.2.2 ன் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்துள்ள அலுவலர் (ஏனைய நிபந்தனைக்கு உற்பட்ட வகையில்) அச்சேவை நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்படுவார்.

iii. இடமாற்றக் குழுவினால் அலுவலர்கள் இடமாற்றப்படும்போது நிறுவனச் சேவையின் தேவைப்பாடுகளும், அலுவலக குழாத்தினரிடையே கனிஷ்ட/சிரேஷ்ட சமநிலைத் தன்மையை பேணுவதற்கு எல்லா சந்தர்ப்பங்களிலும் முயற்சி எடுக்கப்படும்.

iv. 2022 ஆண்டிற்கான வருடாந்தம் இடமாற்றம் பெற்றுள்ள அலுவலர்கள் உள்ளக <u>இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கலாகாது</u>.

v. இடமாற்றக் கட்டளையை நடைமுறைப்படுத்தாவிடின், வருடாந்த உள்ளக இடமாற்ற கட்டளைக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படாத அவ்வுத்தியோகத்தர்களிடமிருந்து நடவடிக்கை மேற்கொள்ளாமைக்கான விளக்கம் கல்விச் செயலாளரினால் கோரப்படும்.

vi. வருடாந்த உள்ளக இடமாற்றக் குழுவிற்கு உண்மைக்கு புறம்பான தகவல்களை சமர்பித்தமையினால் இடமாற்றத்தினை பெற்றுக்கொடுப்பதில் பிரச்சனைகள் ஏற்பட்டிருக்குமாயின் மீளாய்வுக் குழுவின் மூலம் அவ்விடயங்கள் கருத்திற்கொண்டு புதிய இடமாற்றம் பெற்றுக் கொடுக்கப்படுவதோடு அத்தகைய அலுவலர்களால் முன்வைக்கப்டும் மேன்முறையீடுகள் மீண்டும் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

**2.4.1 சேவைக் காலத்தைக் கணிப்பிடல்**

i. வருடாந்த இடமாற்றத்தின் போது சேவைக் காலமானது வருடத்தின் திசெம்பர் 31ஆம் திகதியில் கணிப்பிடப்படும்.

ii. சேவைக்காலம் கணிப்பிடப்படும்போது சேவையின் ஆரம்ப திகதியாக சேவைக்கு அறிக்கையிட்ட வருடத்தின் ஜனவரி மாத முதலாம் திகதி கருத்திற் கொள்ளப்படும். எனினும் அலுவலரின் கட்டுப்பாட்டை மீறிச் சென்ற காரணங்களின் பொருட்டு சேவைக்கு அறிக்கையிட்ட திகதி பிற்பட்ட திகதியாயின் இடமாற்றக் குழுவானது அவை தொடர்பில் கவனம் செலுத்தும். (அலுவலரின் கட்டுப்பாட்டை மீறிய காரணங்களின் பொருட்டு அறிக்கையிடாத காலம் இடமாற்றக் காலத்திற்குள் கணிப்பிடபட மாட்டாது)

iii. அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பொருட்டு, பட்டதாரிகள் பயிலுனர்களாக குறித்தப் பயிற்சியை நிறைவுசெய்த பின்னர் அபிவிருத்தி உதவியாளர்சேவை பதவிக்கு நியமனம் செய்யப்பட்டத் திகதி அவர்களுடைய நியமனத் திகதியாகக் கருத்திற் கொள்ளப்பட்டு இடமாற்ற விண்ணப்பங்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

iv. கல்வி அமைச்சு மற்றும் அதன் கீழியங்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்களம், தேசிய பாடசாலைகள், தேசிய கல்வியியல் கல்லூரிகள் மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் ஆகியவற்றுக்கிடையிலான உள்ளக இடமாற்றமானது அதிகபட்சம் 10 வருடங்களுக்கு மாத்திரம் ( இரு இடமாற்ற சந்தர்ப்பங்களின் கீழ்) மேற்கொள்ளப்படும்.

v. தேசிய பாடசாலையொன்றில் 05 வருடங்கள் சேவையாற்றிய உத்தியோகத்தொருவர் மீண்டும் தேசிய பாடசாலையொன்றுக்கு விண்ணப்பிக்கும்போது ஏனைய அலுவலர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கியப் பின்னரே இவர்களது விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படும்.

3. வருடாந்த உள்ளக இடமாற்றக் குழுவின் அமைப்பு தொடர்பான விபரங்கள்.

கல்வி அமைச்சின் செயலாளரினால் தாபிக்கப்படுகின்ற இணைந்த சேவைகள் அலுவலர்களின் உள்ளக இடமாற்றக் குழுவின் அமைப்பு பின்வருமாறு

i. இணைந்த சேவைகள் பிரிவின் உதவிச் செயலாளர்
ii. பிறிதொருப் பிரிவின் உதவிச் செயலாளரொருவர்
iii. இணைந்தசேவைகள் பிரிவின் நிர்வாக உத்தியோகத்தர்
iv. வருடாந்த உள்ளக இடமாற்றக் குழுவில், விடயப்பரப்பிற்குரிய அலுவலர் குழு மற்றும் சேவைக்குரிய அரச அலுவலர்களின் குறைந்த பட்சம் 15% பிரதிநிதித்துவத்துடன் தொழிற் சங்கமொன்றினால் பெயர் குறிப்பிடப்பட்ட பிரதிநிதியொருவர் அல்லது தொழிற்சங்க செயற்பாடுகளுக்காக முழுமையாக விடுவிக்கப்பட்ட ஒருவர்.

4. வருடாந்த உள்ளக இடமாற்ற ஆலோசனை மீளாய்வுக் குழுவின் அமைப்பு தொடர்பான விபரங்கள்

கல்வி அமைச்சின் செயலாளரினால் தாபிக்கப்படுகின்ற இணைந்த சேவைகள் உத்தியோகத்தரின் உள்ளக இடமாற்ற ஆலோசனை மீளாய்வுக் குழுவின் அமைப்பானது பின்வருமாறு,

i. இணைந்த சேவைகள் பிரிவின் சிரேஷ்ட உதவிச் செயலாளர்
ii. பிறிதொருப் பிரிவின் இரு சிரேஷ்ட உதவிச் செயலாளர்கள்.
iii. வருடாந்த உள்ளக இடமாற்றக் குழுவின் விடயப்பரப்பிற்குரிய அலுவலர் குழு மற்றும் வருடாந்த உள்ளக இடமாற்றக் குழுவில், விடயப்பரப்பிற்குரிய அலுவலர் குழு மற்றும் சேவைக்குரிய அரச அலுவலர்களின் குறைந்த பட்சம் 15% பிரதிநிதித்துவத்துடன் தொழிற் சங்கமொன்றினால் பெயர் குறிப்பிடப்பட்ட, பிரதிநிதியொருவர் அல்லது தொழிற்சங்க செயற்பாடுகளுக்காக முழுமையாக விடுவிக்கப்பட்ட ஒருவர்.

5. வருடாந்த உள்ளக இடமாற்றத்தினைப் பெற்றுக் கொடுக்கும்போது கருத்திற் கொள்ளப்படும் ஏனைய பொது விடயங்கள்

5.1 சிறப்பு விடயங்கள்

i. குறித்த அலுவலரின் வாழ்க்கைத் துணை பொலிஸ் அல்லது முப்படைகளில் வடக்கு, கிழக்கில் யுத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது இயலாமை நிலைக்கு ஆளாகியுள்ளமை தொடர்பில் எழுத்து மூலமான சாட்சிகள் சமர்பிக்கப்படும் சந்தர்ப்பத்தில் குறித்த அலுவலரின் இடமாற்றமானது அவரின் வேண்டுகோளுக்கமைய மேற்கொள்ளப்படும். அத்தகைய அலுவலர்களின் இடமாற்ற வேண்டுகோள்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ii. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அலுவலரின் வேண்டுகோளுக்கமைய, தனது வாழ்க்கைத் துணையின் சேவைநிலையம் அமைந்துள்ள பிரதேசத்திற்கு அருகிலுள்ள சேவை நிலையமொன்றிற்கு இடமாற்றம் பெற்றுக் கொடுப்பதற்கான சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

iii. பாடசாலைக்கு செல்லும் பிள்ளைகள், விசேட தேவையுடைய பிள்ளைகள், நீண்டகால நோய் நிலைமையினால் ஓரிடத்திலேயே இருக்கின்ற வாழ்க்கைத் துணை மற்றும் வாழ்க்கைத் துணை வெளிநாட்டில் இருத்தல் முதலான ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களுடன் திணைக்களத் தலைவரின் சிபாரிசுடன் சமர்பிக்கப்படுகின்ற கோரிக்கை கருத்திற் கொள்ளப்பட்டு இடமாற்றம் பரிசீலனை செய்யப்படும்.

iv. இணைந்த சேவையிலுள்ள உத்தியோகபூர்வ வாகனங்களின் பொருட்டு இணைக்கப்பட்டிருக்கும் சாரதிகள் தொடர்பான தகவல்களை வருடாந்த உள்ளக இடமாற்ற குழுக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்பதாக அறிவித்தல் வேண்டும்.

v. உள்ளக இடமாற்றமானது ஒவ்வொரு சேவையின் பொருட்டும் வெவ்வேறாக கருத்திற் கொள்ளப்படும்.

5.2 வருடாந்த உள்ளக இடமாற்றத்திற்குள் உற்படுத்தப்படாத அலுவலர்கள்

வருடாந்த உள்ளக இடமாற்றத்தின் பொருட்டு காலங்கள் கணிப்பிடப்படும் திசெம்பர் 31ஆம் திகதியில் ( உதா: 2022ஆம் ஆண்டின் பொருட்டு 2021.12.31 ஆம் திகதி) 58 வயதினை பூர்த்திசெய்துள்ள அலுவலர்களால் இடமாற்ற கோரிக்கை சமர்பிக்கப்படாத சந்தர்ப்பத்தில் அவர்கள் இடமாற்றம் செய்யப்படலாகாது.

5.3 தொழிற் சங்கத்திற்கான அனுசரணை

தொழில் ஆணையாளர் நாயகத்தினால் பதிவு செய்யப்பட்டு இணைந்தசேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இணைந்தசேவைகளின் சேவைகளுக்குரிய தொழிற் சங்கமொன்றின்,அமைப்பின் செயலாளர், தலைவர், பொருளாளர் மற்றும் ஊடக நிறைவேற்று உறுப்பினர்களுக்கு இடமாற்றங்களை பெற்றுக்கொடுக்க வேண்டின் உரிய தொழிற்சங்க செயலாளரின் சிபாரிசினை கருத்திற் கொண்டு சங்கத்தின் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படாத சேவை நிலையமொன்றுக்கு இடமாற்றம் பெற்றுக் கொடுக்கப்படும். இங்கு இடமாற்றத்திற்கு உள்ளாகும் அலுவலர் சிபாரிசினைப் பெற்றுக் கொடுக்கும் தொழிற்சங்கத்தின் தாய்ச் சங்கத்தில் மேற்படி பதவிகளை வகிக்கும் ஒருவராக இருத்தல் கட்டாயமானதாகும். பிராந்திய அல்லது கிளை அமைப்புகளில் மாத்திரம் பதவி வகித்தல் இவ்வனுசரணையைப் பெற்றுக்கொள்ளவதற்கான தகைமையாகாது.

6. இணைந்த சேவைகள் பணிப்பாளரின் வருடாந்த இடமாற்றத் தீர்மானத்துடனான உள்ளக இடமாற்றம் 2022 மார்ச் மாதம் 02 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் .

7. உள்ளக இடமாற்ற கால அட்டவணை

| | |
|---|---|
| 2021 திசெம்பர் 23 | உள்ளக இடமாற்ற விண்ணப்பங்களைக் கோரல் |
| 2022 ஜனவரி 06 | உள்ளக இடமாற்ற விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி |
| 2022 ஜனவரி 12 | உள்ளக இடமாற்றக் குழுக் கூடுதல் |
| 2022 ஜனவரி 19 | உள்ளக இடமாற்றக் குழுவின் தீர்மானங்களை அறிவித்தல்/ மேன்முறையீடுகளைக் கோரல் |
| 2022 பெப்ரவரி 02 | மேன்முறையீடு ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி |
| 2022 பெப்ரவரி 07 | மீளாய்வு சபைக்கூட்டம் |
| 2022 பெப்ரவரி 10 | மீளாய்வின் தீர்மானங்களை அறிவித்தல் |
| 2022 பெப்ரவரி 11 | இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு இடமாற்றத் தீர்மானங்களை அறிவித்தல் |
| 2022 மார்ச் 02 | வருடாந்த உள்ளக இடமாற்றக் கட்டளை நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய திகதி |

8. வருடாந்த உள்ளக இடமாற்றக் கட்டளைக்கு எதிரான மேன்முறையீடுகளை சமர்பித்தல்

8.1 உள்ளக இடமாற்றக் குழுவினால் வழங்கப்பட்ட இடமாற்றத் தீர்மானங்கள் கல்வி அமைச்சின் வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுவதோடு தொலைநகல் மூலம் குறித்த நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கப்படும். அத்தீர்மானங்கள் தொடர்பில் பாரபட்சத்திற்கு உள்ளாகிய அலுவலர்கள் தீர்மானங்கள் தொடர்பில் திருப்தியடையாது விடின் இடமாற்றம் தொடர்பில் மேன்முறையீட்டினை சமர்பிக்க முடியும்.

8.2 இடமாற்றக் கட்டளைக்கு எதிராக சமர்பிக்கப்படுகின்ற மேன்முறையீடுகள், குறித்த அரச அலுவலருக்கு இவ்விடமாற்றக் கட்டளை கிடைக்கப்பெற்று 14 நாட்களுக்குள் சமர்பிக்கப்படுதல் வேண்டும். குறித்த காலப்பகுதிக்குள் சமர்பிக்கப்படாத மேன்முறையீடுகள் கல்விச் செயலாளரினால் நிராகரிக்கப்படும்.

8.3 மேற்படி வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணம் கிடைக்கப்பெற்று 15 நாட்களுக்குள் இடமாற்றக் கட்டளைக்கு எதிராக அரச அலுவலரால் சமர்பிக்கப்பட்டுள்ள மேன்முறையீடு தொடர்பிலான தீர்மானங்கள் மீளாய்வுக் குழுவினால் மேற்கொள்ளப்படும்.

8.4 மேற் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சமர்பிக்கப்பட்டுள்ள மேன்முறையீடு தொடர்பிலான கல்விச் செயலாளரின் தீர்மானங்கள் கல்வி அமைச்சின் வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுவதற்கு மேலதிகமாக மேன்முறையீட்டாளருக்கும் அறிவிக்கப்படும். அத்துடன் உரிய கோவைகளை இற்றைப்படுத்துவதற்காக அதன் பிரதியொன்று நிறுவனப் பணிப்பாளருக்கும் அனுப்பிவைக்கப்படும்.

செயலாளர்
கல்வி அமைச்சு
திகதி 2021.12.23